**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.203/2022</u>**

அ.சா.– 1 நாள் – 22.08.2026

பெயர் : சதிஷ்

தகப்பனார் பெயர் : அருள்

வயது : 35

Accused present.

குறுக்கு விசாரணை

எங்கள் நிறுவனம் கூட்டான்மை நிறுவனமா அல்லது தனி நபர் நிறுவனமா என்றால் தனி நபர் நிறுவனம். சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். அந்த பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த நிறுவனத்தில் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் உதவி மேலாளராக உள்ளேன். எத்தனை வருடமாக பணி புரிகிறேன் என்றால் 10 வருடமாக. இவ்வழக்கில் அனுப்பப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பானது நிறுவனத்தின் கல்பாக்கம் கிளையில் இருந்தது அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கானது அருள்ராஜ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் நான் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2018 ஆண்டில் இவ்வழக்கின் தொகை கொடுக்கும்போது அந்த நிறுவனத்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். எதிரிக்கும் புகார்தாரர் நிறுவனத்திற்கும் நடந்த பண பரிவர்த்தனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களின்அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் நிறுவனத்தில் வழக்கு விவரங்களை உறுதிசெய்துக்கொண்டேன். 21.04.2018 அன்று தான் கடன் ஒப்பந்தம் படி கடனானது கொடுக்கப்பட்டதாக புகார், பிரமாண வாக்குமுலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கடன் ஒப்பந்தத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன். என்ன வட்டி தொகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. அந்த கடன் ஒப்பந்தத்தில் பாதுகாப்பிற்காக முன்னதாகவே காசோலைகள் பெறப்படுவதாக நிபந்தனைகள் உள்ளது என்று சொன்னால் அவ்வாறு இல்லை. இந்த

ஒப்பந்தத்தை தாக்கல் செய்தால் வழக்கு காசோலையானது பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்டது என்று தெரிந்துவிடும் என்று மறைத்துள்ளேன் என்றால் தவறு. இவ்வழக்கில் அனுப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்பு வேறு எதாவது நினைவூட்டல் கடிதம் பணம் கேட்டு அனுப்பட்டுள்ளதா என்றால் அனுப்பியுள்ளோம். அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு நினைவூட்டல் அனுப்பியிருந்தால் நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்திருப்போம் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. நாங்கள் அனுப்பிய அறிவிப்பில் 2018 ம் ஆண்டு ஏப்பரல் மாதத்தில் 10 லட்சம் கடன் வழகங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு வட்டியாக ரூபாய் 7,42,896/– தொகை கனக்கீடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே அறிவிப்பில் நிலுவை தொகை ரூபாய் 16,54,892/– என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அதே அறிவிப்பில் ரூபாய் 2,92,827/– தொகை எதிரி செலுத்தியுள்ளதாக குறிப்ப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்த ஒப்பந்த தொகையானது ரூபாய் 17,42,896/– என்றால் சரிதான். எதிரி ஏற்கனவே செலுத்திய தொகை ரூபாய் 2,92,827/– என்றால் சரிதான். மேற்படி ரூபாய் 17,42,896/– தொகையில் ரூபாய் 2,92,827/– தொகையினை கழித்தால் எதிரி ரூபாய் 14,50,069/– தொகை செலுத்தவேண்டும் என்றால் மேற்படி தொகை காலதாமதத்திற்கான தொகை வட்டி தொகை சேர்க்காமல் உள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான வட்டி தொகை எவ்வளவு என்பதை காண்பிப்பதற்காக கணக்கு விவரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் 36 சதவீதம் வட்டி என கூறி கணக்கு பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள கணக்கு பட்டியலில் ஆ.தா.சா.6 ஆவணத்தின் ஒவ்வொரு payment உடனும் delay payment சேர்கப்பட்டுள்ளது. மேற்படி கணக்கு பட்டியலில் மொத்த காலகட்டத்திற்கான கணக்கு பட்டியல் என்றால் சரிதான். ஒவ்வொரு மாதமும் டிலே பேமண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மேற்படி ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யப்பபடவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரமாண வாக்குமுலத்தின்போது தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை delay payment தொகை எவ்வளவு என்பதை குறிப்பிட்டு எந்த ஸ்டேட்மென்ட்டும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் பிரமாண வாக்குமுலத்துடன் தாக்கல் செய்தள்ள ஸ்டேட்மென்ட்டில் வழக்கு தேதிக்கு பின்னர் உள்ள தொகையுடன்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது அறிவிப்பின்படி ரூபாய் 16,54,892/– தொகை கேட்கப்பட்டுள்ளது என்றாலும் ஆனால் காசோலையில் ரூபாய் 16,27,000/– தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு தொகைக்கும் ரூபாய் 27,000/– தொகை வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகை வித்தியாசத்திற்கான காரணத்தினை அறிவிப்பிலோ அல்லது புகாரிலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் புகாரில் குறிப்பிட்டுள்ளேன்.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.